செய்தி வெளியீடு எண்.39-2016 நாள்: 19.06.2016

## விழுப்புரம் கோலியனூரான் வாய்க்கால் ரயில்வே மேம்பாலத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வீ.சண்முகம் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில், தேசிய நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுடன் நேரில் சென்று திடீர் ஆய்வு செய்தார்.

## கோலியனூரான் வாய்க்கால் ரயில்வே மேம்பாலம் சீரமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்ய வேண்டும். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வீ.சண்முகம் அவர்கள் உத்தரவு.

*****

விழுப்புரம் ரயில்வே மேம்பாலத்தில் ஏற்பட்டுள்ள பழுதினையும், கோலியனூர் வாய்க்காலில் ஏற்பட்டுள்ள பழுதினையும் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வீ.சண்முகம் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில், தேசிய நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுடன் இன்று (19.06.2016) நேரில் சென்று திடீர் ஆய்வு செய்தார்.

விழுப்புரம் ரயில்வே மேம்பாலத்திற்கு அடிப்பகுதியில் செல்லும் கோலியனூரான் வாய்க்காலில் ஏற்பட்டுள்ள பழுதினால், ரயில்வே மேம்பாலத்தில் பள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வீ.சண்முகம் அவர்கள், இன்று நேரில் சென்று பார்வையிட்டு, மேம்பாலத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை போர்க்கால அடிப்படையில் உடனடியாக சீரமைக்க வேண்டும், சீரமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்து அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என தேசிய நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.ராஜசேகரன், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஜீனத்பானு, விழுப்புரம் நகரமன்றத் தலைவர் திரு.ஜி.பாஸ்கரன், தேசிய நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட மேலாளர் திருமதி.கனிமொழி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.சண்முகம், உதவி செயற்பொறியாளர் திரு.பாலமுருகன், நகராட்சி பொறியாளர், வட்டாட்சியர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.